# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

**S.C.No. 9/2021**

**PROSECUTION WITNESS No - PW- 1**

**Name :** முத்துலெட்சுமி **Caste:**

**Husband Name:** **Calling:**

**Village:** **Religion:**

**Taluk:** **Age:**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of June 2024.**

3-ம் எதிரி ஆஜர், 2-ம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை :ஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் எனது ஊர்காரர் தான். சம்பவம் நடந்த அன்று நான் காலையில் திருப்பத்தூரிலிருந்து மதுரையை நோக்கி சென்று கொண்டிருந்தேன், அப்பொழுது, அங்கு எதிரே வந்த லாரி எனது இருசக்கர வாகனத்தின் மீது பயங்கரமாக மோதியது இதில் நான் நிலைதடுமாறி கீழே விழுந்துவிட்டேன்.**

1) நான் மதுரை செல்லூரில் குடியிருந்து வருகிறேன் .எனது கணவர் பெயர் காளிதாஸ்.அவர்தான் இந்த வழக்கில் இறந்து போனவர்.2011 ஆம் ஆண்டு எனக்கும் எனது கணவருக்கும் திருமணம். எனது கணவர் செல்லூர் மார்க்கெட்டில் கவிதா ஹோட்டல் என்ற பெயரில் திருமண நாள் முதல் 6, 7 வருடங்களாக ஹோட்டல் நடத்தி வந்தார். நானும் அந்த ஹோட்டலில் எனது கணவருக்கு உதவியாக கல்லாவில் பணம் வாங்கி போடும் வேலை செய்து வந்தேன் .

2) மாலை 6 மணி முதல் டிபன் கடை, இரவு 12 மணி வரை நடக்கும். ஒரு வயதானவர், எங்கள் இருவரை தவிர அங்கு சப்ளையராக வேலை செய்து வந்தார். அவர் பெயர் எனக்கு மறந்துவிட்டது. எனது மாமனார் பெயர்

ஜெயராமன், மாமியார் பெயர் வசந்தி, அவர்களும் எனது கணவர் நடத்தும் உணவகத்திற்கு வந்து உதவியாக இருப்பார்கள் . விஜி பாண்டியன் தெரியுமா என்றால் இறந்து போன விஜி பாண்டியன் எனக்கு தெரியும்.

3) அவர் எனது கணவரின் அத்தை மகன் வீட்டில் தங்கிக் கொண்டு ஆட்டோ ஓட்டி வருகிறார். 3-ம் எதிரி விக்னேஷ் விஜய் பாண்டியனின் உடன்பிறந்த சகோதரர். நீதிமன்றத்தில் அவரை நான் பார்த்ததில்லை . நான் இல்லாத சமயத்தில் அவர்கள் ஓட்டலுக்கு வந்திருக்கலாம். இறந்து போன விக்னேஷ் பாண்டியன் எனது கணவர் நடத்தும் ஹோட்டலுக்கு வந்து சாப்பிட்டு செல்வார்கள் அவ்வாறு சாப்பிடும் பொருளுக்கு பணம் கொடுப்பது வழக்கம் கிடையாது என் அத்தை மகன் என்பதால் அந்த உரிமையில் பணம் கொடுப்பது அவர்களது வாடிக்கை இல்லை.

4) அது அல்லாமல் அவரது நண்பரான திவான் இன்று நீதிமன்றத்தில் இல்லை அவரை அழைத்து வந்து ஒன்றாக சேர்ந்து உணவு சாப்பிடுவதாக எனது கணவர் சொல்லியுள்ளார். எனது கணவர் இறப்பதற்கு சுமார் ஒரு வாரத்திற்கு முன்பு இவ்வாறு அடிக்கடி பணம் கொடுக்காமல் வந்து சாப்பிட்டு செல்வது குறித்து எனது கணவர் ஆஜர் எதிரிகளிடம் சத்தம் போட்டு உள்ளார்,

5) அதனால் எதிரிகள் எனது கணவர் இருந்தால் தானே இவ்வாறு சத்தம் போடுகிறாய் என சொல்லி விரட்டிச் சென்றுள்ளார்கள். அந்த சமயத்தில் நான் ஹோட்டலில் இல்லை அதன் பிறகு மறுநாள் வந்து எனது கணவரை சமாதானம் செய்துவிட்டு பணம் கொடுத்து விட்டு சென்று விட்டார்கள் 28.02.2019 முன்பு இரண்டு நாட்களுக்கு முன்பு கூட்3-ம் எதிரி ஆஜர், 2-ம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்படுகிறது.டிட்டு போனாங்க

எங்கள் வீட்டிற்கு மதியம் 12 மணிக்கு வந்து யார் வந்தாங்க, இறந்து போன விஜி பாண்டியன் தனது ஆட்டோவில் வந்து எனது கணவரை சிவகங்கை போக வேண்டும் என்று சொல்லி அழைக்கின்றார் அவருடன் வேறு யாரேனும் வந்தார்களா என்று நான் பார்க்கவில்லை.

6) எனது கணவர் போகும்பொழுது தனது செல்போனை வீட்டில் வைத்துவிட்டு சென்றுவிட்டார் வெகுநேரமாகியும் அவர் வீடு திரும்பாததால் விஜி பாண்டிக்கு, நான் எனது அத்தை மற்றும் மாமா போன் செய்தார்கள் அவர் சிவகங்கையில் தான் இருப்பதாகவும் மறுநாள் காலையில் வருவதாகவும் சொன்னார்கள். மறுநாள் எனது அத்தை போன் போட்டு பார்த்த பொழுது விஜி பாண்டியன் நம்பர் சுவிட்ச் ஆப் என்று வந்தது. விஜி பாண்டியன் தாயாருக்கு எனது அத்தை போன் செய்து கேட்ட பொழுது கிளம்பி விட்டதாகவும் சொன்னார். 7) மறுநாள் இரவு 7.00 மணி வரை எனது கணவர் வீடு திரும்பாததால் எனது கணவரின் தாய்மாமன் புருஷோத்தமன் எங்களுக்கு போன் செய்து எனது கணவர் எங்கு உள்ளார் என்று விசாரித்தார். நான் சிவகங்கைக்குத்தான் சென்றிருப்பதாக தகவல் சொன்னேன். அப்பொழுது எனது கணவரின் பிரேதம் முந்திரி தோப்பில் இருப்பதாக சொன்னார்கள். இரவு சுமார் 11.00 மணி அளவில் நான் எனது மாமனார் மற்றும் மாமியார் ஆகியோருடன் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு வந்து எனது கணவரின் பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன்.

8) எனது கணவரின் கழுத்தில் பாட்டிலால் குத்தியது போன்ற காயம் இருந்தது. அதை பார்த்தேன், இடது கண்ணில் காயம் இருந்தது, முகத்தில் இரத்த காயம் இருந்தது. ஏற்கனவே எதிரிகளுடன் கணவருக்கு ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக நடந்த விபரங்களை சொன்னேன். எனது கணவர் அன்றைய தினம் எதிரியுடன் சென்ற பொழுது காபி கலர் ஆரஞ்சு கலந்த டி ஷர்ட் மற்றும் ஊதா நிற ஜீன்ஸ் பேண்ட் ஆகியவை என் கணவர்

அணிந்திருந்தார் சா.பொ , 1,2 கணவரின் முகம் மற்றும் அவர் அணிந்த உடைகளை வைத்து அவரை நான் அடையாளம் காண்பித்தேன். போலீசாரிடம் விசாரணையில் சொல்லி உள்ளேன்.

<u>நீதிமன்ற கேள்வி</u>

எனது கணவரின் போன் நம்பர் 73 73 64 54 93. எனது மாமியாரின் போன் நம்பர் எனக்கு தெரியாது.

<u>2-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> -

1) இறந்து போன விஜி பாண்டியன் எந்தெந்த தேதிகளில் தனது நண்பர்களுடன் பணம் கொடுக்காமல் உணவருந்தி சென்றார் என்று நான் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான்,

2) எனது கணவரின் பிரேதத்தை நான் மருத்துவமனையில் வைத்து தான் அடையாளம் காட்டினேன். எனது கணவரை யார் கொலை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அத்தை மற்றும் மாமா பாட்டிலால் குத்திய காயம் பிரேதத்தை பார்த்து விட்டு சொன்னார்கள்.நான் மருத்துவமனையில் அடையாளம் காட்டிய பொழுது ஒருமுறை விசாரித்தார்கள். அதன் பிறகு மற்றொரு முறையும் என்னை இரண்டு நாட்கள் கழித்து விசாரித்தார்கள் எனது வீட்டில் வைத்து இரண்டாவது முறை விசாரித்தார்கள் 3) போலீசார் அவ்வாறு விசாரணை செய்யும் பொழுது தட்டச்சு செய்தார்களா எழுதினார்களா என்று நான் கவனிக்கவில்லை. கேட்டுக் குறித்துக் கொண்டார்கள் தற்பொழுது முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலீஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். இரண்டாம் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் போலீசார் சொல்லிக் கொடுத்து திவானுக்கு எதிராக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு

செய்யவில்லை, என்றும் இறந்து போன நபர் எனது கணவர் என்பதால் வழக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>விசாரணை ஏற்றுக்கொண்டு 3-ம் எதிரி தரப்பு மேற்கொண்டு விசாரணை செய்கிறார்</u>

ஆஜர் எதிரிகள் எனக்குபணம் கொடுக்காமல் சாப்பிட்டு சென்றதாக சொல்லும் விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. சாப்பிட்டு சென்ற விவரம் எனக்கு தெரியும், ஒரு முறை பணம் கொடுக்காமல் சண்டை போட்டதை நான் நேரடியாக பார்த்திருக்கிறேன். 3-ம் எதிரி விக்னேஷை நான் நேரடியாக பார்த்திருக்கிறேன். எனது கணவர் இறப்பிற்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் எனது கணவர் இறந்ததால் தற்பொழுது போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.07.25 14:58:51 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

## DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

**S.C.No. 9/2021**

**PROSECUTION WITNESS No - PW- 2**

**Name** : வசந்தி **Caste:**

**Husband Name:** **Calling:**

**Village:** **Religion:**

**Taluk:** **Age:**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of June 2024.**

3-ம் எதிரி ஆஜர், 2-ம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை :</u>

1) செல்லூர் மார்க்கெட்டில் எனக்கு சொந்தமாக வீடு மற்றும் கடைகள் உள்ளது, நான் அந்த கடையில் பழக்கடை வைத்துள்ளேன் .எனது கடைக்கு எதிரில் எனது மகன் கடை நடத்தி வந்தார் அ.சா, 1 முத்துலட்சுமி எனது மருமகள், ஜெயராமன் எனது கணவர் வழக்கில் இறந்து போன காளிதாஸ் எனது மகன். வழக்கில் இறந்து போன முதல் எதிரி விஜி பாண்டி எனது அண்ணன் மகன். அவரது சகோதரர் எனது அண்ணன் மகன் 2-ம் எதிரி திவான் எனக்கு தெரியும். விஜிபாண்டி மதுரையில் ஆட்டோ ஒட்டி வந்தார்.

2) எனது கடையை நான் 10 மணிக்கு மேல் மூடி விட்டு சென்று விடுவேன் எனது மகன், ஆஜர் எதிரிகள் மூன்று பேரும் அடிக்கடி தனது ஹோட்டலுக்கு வந்து உணவு சாப்பிட்டு விட்டு பணம் கொடுக்காமல் சென்று வருகிறார்கள் என என்னிடம் தெரிவித்தார்.

ஒரு நாள் அவர்கள் இடையே சண்டை வந்து என் மகனை பார்த்துக் கொள்வதாக சொல்லிவிட்டு மிரட்டினார்கள்.

3) அப்பொழுது நான் அவர்களை சென்று விலக்கி விட்டேன். இரண்டு நாட்கள் கழித்து கடைக்கு வந்து சாப்பிட்டு விட்டு உனக்கு பணம் தானே வேணும் நான் தருகிறேன் என்று சொல்லி சாப்பிட்டதற்கு பணம் கொடுத்துள்ளார்கள். கடந்த 27.2.2019 ஆம் தேதி இன்று எனது கடைக்குப் பின்னால் தான் எங்கள் வீடு அமைந்துள்ளது.

4) எங்கள் கடைக்கு வந்து மதியம் 12 மணி அளவில் மூன்று எதிரிகளும் தாங்கள் வந்த ஆட்டோவில் எனது மகனை அழைத்து சென்றார்கள். எதற்காக செல்கிறீர்கள் என கேட்டதற்கு சும்மா அழைத்து செல்வதாக சொல்லி அழைத்து சென்றார்கள். சரி அண்ணன் மகன் தானே என நானும் பெரிது படுத்தவில்லை. அன்றைய தினம் புதன்கிழமை இரவு வரை எனது மகன் வீடு திரும்பவில்லை. 5) நான் இது சம்பந்தமாக முதல் எதிரி விஜி பாண்டிக்கு போன் செய்து பார்த்த பொழுது தனக்கு தெரியாது என்றும் எனது மகன் வீடு திரும்பி விட்டதாக சொன்னார். மாலை மீண்டும் அவனது தாயாருக்கு நான் போன் செய்தபொழுது அவர் சிவகங்கையில் தான் இருக்கிறார் என சொன்னார். காலையில் வீட்டிற்கு அழைத்து வருவதாக சொன்னார் வியாழக் கிழமை விஜி பாண்டியன் தாயாருக்கு நான் போன் செய்த பொழுது அவர் சிவகங்கையிலிருந்து செல்லூருக்கு எனது மகன் வந்து கொண்டிருப்பதாக சொன்னார்.

6) அதன் பிறகு போன் செய்தார் அவர்கள் எடுக்கவில்லை மாலையில் எனது சகோதரர் புருஷோத்தமன் இறந்து கிடக்கிறார் என சிவகங்கையில் இருந்து போன் வந்தது, பிரேதம் இருப்பதாகவும் தகவல் சொன்னார்கள் அப்பொழுது மாலை 6:00 மணி இருக்கும்

அதன் பிறகு நாங்கள் சிவகங்கைக்கு அரசு மருத்துவமனைக்கு இரவு 8.00, 8:30 மணிக்கு வந்தோம்.

7) எனது மகனின் முகத்தில் ரத்தக்காயமும், கழுத்தில் குத்து காயம் இருந்தது போலீசார் இது சம்மந்தமாக எங்களை விசாரித்த பொழுது ஆஜர் எதிரி மூவரும் தான் எனது மகனின் இறப்பிற்கு காரணம் என சொல்லி உள்ளேன், முதல் எதிரி என் மகனை அழைத்துச் சென்ற ஆட்டோ எண் TN 58 39 34 ஆட்டோவை என்னால் அடையாளம் காட்ட முடியும். அந்த ஆட்டோவின் புகைப்படம் என்னிடம் காண்பிக்க கூடிய சா.பொ-3

8) ஆட்டோ காவல் காவல்துறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள். சாப்பிட்ட உணவிற்கு அடிக்கடி காசு தராமல் சென்றதால் எனது மகன் ஆஜர் எதிரிகளிடம் கோபித்ததால் தான் இந்த சம்பவம் ஏற்பட்டுள்ளது. எனது போன் நம்பர் 87 60 60 50 27.

9) விஜய் பாண்டிக்கு நான் எனது நம்பரில் இருந்து போன் செய்த பொழுது அவர் எடுக்கவில்லை. எனவே எனது நாத்தனாரான அவரின் தாயாருக்கு நான் போன் செய்தேன். அவரது போன் நம்பர் எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை. போலீஸ் விசாரணையில் மேற்கண்ட நம்பரை சொல்லி உள்ளேன். என்னிடம் காண்பிக்கக் கூடிய நான்கு புகைப்படங்களில் உள்ளது தான். முதல் எதிரி ஆட்டோவில் தான் எனது மகன் சம்பத்தன்று அழைத்துச்செல்ப்பட்டார், அந்த போட்டோக்கள் சா.பொ-4 ஆட்டோ காவல் நிலைய கட்டுப்பாட்டில் அமைந்துள்ளது,

<u>இரண்டாம் எதிரி தரப்ப குறுக்கு விசாரணை</u> -

1) மூன்று மாதங்களாக ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு பணம் கொடுக்காமல் சென்றுள்ளார். இது சம்பந்தமாக எனது மகன் ஓயாமல் விஜிபாண்டி தனது நண்பர்களுடன் வந்து சாப்பிட்டுவிட்டு பணம் கொடுக்காமல் சென்று வருவதாக என்னிடம் புகார் தெரிவித்தார். மூன்று பேராக வந்து சாப்பிட்டு செல்வதாக தான் சொல்லி உள்ளார்.

2) நான் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் தற்போது வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. விஜி மதுரையில் தான் ஆட்டோ ஓட்டுகிறார் என்றால் சரிதான் விஜி ஓட்டி வந்த ஆட்டோ குறித்த விவரம் எனக்கு தெரியும் என்றும் அவர் மதுரையில் தொழில் செய்யும் விவரம் தெரியும் என்றும் அதனால் தற்பொழுது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3) என்னை மருத்துவமனையில் வைத்து தான் போலீசார் விசாரித்தார்கள் அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை நான் தான் மூன்று எதிரிகளின் பெயரையும் போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளேன் எனது மகனை இரண்டாம் எதிரி அழைத்து செல்லவில்லை என்றோம் தற்பொழுது வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல இரண்டாவது எதிரி வரும்பொழுது என்ன உடை உடுத்திருந்தார் என்று நான் கவனிக்கவில்லை இரண்டாம் விதிக்கும் வழக்கம் சம்பந்தமில்லை என்றும் தற்பொழுது பொய் சாட்சி அளிக்கிறேன் என்றார் சரியல்ல.

<u>3-ம் எதிரி 2-ம் எதிரி குறுக்கு விசாரணை தனது தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொண்டு மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்கிறார் -</u>

1) ஹோட்டலில் மூன்று பேரும் வந்து சாப்பிட்டுவிட்டு பணம் செலுத்தாமல் சென்றதாக தற்போது வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. மூன்றாம் எதிரிக்கும் வழக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும் தற்பொழுது இறந்து

போனது என் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) மதுரையில் ஓட்டலில் பிரச்சனை ஏற்பட்டது தொடர்பாக எனது மகன் புகார் எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அவர் நாத்தனார் மகன் என்பதால் புகார் தெரிவிக்கவில்லை நான் கூறுவது போல் ஓட்டலில் எவ்வித பிரச்சனையும் நடைபெறவில்லை என்றும் வழக்குக்காக பிரச்சினை நடந்ததாக பொய்யா குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.07.25 14:59:13 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

**DEPOSITION OF WITNESS.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI**

**S.C.No.9/2021**

**PROSECUTION WITNESS No - PW- 3**

**Name :** மொகமத் பரீதா அஸ்லாம் **Caste:**

**Husband Name:** **Calling:**

**Village:** **Religion:**

**Taluk:** **Age:**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of June 2024.**

3-ம் எதிரி ஆஜர், 2-ம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>** :

நான் சிவகங்கை MPTC அண்ணா நகரில் குடியிருந்து வருகிறேன். காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 28.2.2019 ஆம் தேதி அன்று இரவு 7 மணிக்கு நானும் எனது நண்பர் ராஜாவும் பக்கத்தில் உள்ள முந்திரி தோட்டத்தில் ஒருவர் இறந்து கிடப்பதாக செய்தி கேள்விப்பட்டு அங்கு சென்று வேடிக்கை பார்த்தோம். அப்பொழுது போலீசார் அங்கு வந்து படம் வரைந்து கொண்டிருந்தார்கள். அந்தப் பார்வை மகஜர் தான் அ.சா.ஆ-1 மேலும் அங்கு ரத்தம் படிந்த மண் மற்றும் ரத்தம் படியாத மண், உடைந்த பீர்பாட்டில் துகள்கள் ஐந்து ஆகியவற்றை போலீசார் கைப்பற்றி அதற்கான கைப்பற்றுதலில் மாதிரி கையெழுத்து வாங்கினார்கள். 2 உடைந்த பீர் பாட்டில் துகள்கள் **சாபொ - 4** ரத்தம் படிந்த மண் **சாபொ - 5** மாதிரி மண் **சா.பொ 6**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

இரண்டாம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -

அதில் நான் கையெழுத்திட்ட ஆவணத்தை படித்து பார்க்கவில்லை. தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு அருகில் ஒயின்ஷாப் உள்ளது என்றால் சரிதான். நிறைய பேர் உட்கார்ந்து மது அருந்துவார்கள் என்றால் சரிதான். அந்த இடம் முழுவதும் உடைந்த பாட்டில் நிறைய இருக்கும் என்றால் சரிதான். நான் கூறுவது போல் போலீசார் என்னிடம் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து பெறவில்லை என்றால் சரி அல்ல.

3-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -

சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் எனக்கும் எனது பகுதியைச் சேர்ந்த மகுடபதிக்கும், பிரச்சினை இருந்ததென்றால் சரியல்ல. அவ்வாறு அந்த வழக்கு சம்பந்தமாக விசாரணைக்கு நான் காவல் நிலையத்தில் இருந்த பொழுது போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.07.25 14:59:27 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

**DEPOSITION OF WITNESS.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI**

**S.C.No. 9/2021**

**PROSECUTION WITNESS No - PW- 4**

**Name :** ராதா **Caste:**

**Husband Name:** **Calling:**

**Village:** **Religion:**

**Taluk:** **Age:**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of June 2024.**

3-ம் எதிரி ஆஜர், 2-ம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u> :

1) நான் சிவகங்கை மீனாட்சி நகர் பூங்கா அருகில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் போலீசாக வேலை செய்து வருகிறார். என் கணவரிடம் இருந்து நான் சுமார் 6, 7 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறேன். எனது மாமியார் பெயர் முத்துலட்சுமி அவர் தற்போது இறந்து விட்டார். எனது அம்மா வீடு அண்ணா நகரில் அமைந்துள்ளது

**2)** கடந்த 28.02. 2019 ஆம் தேதி நான் மதியம் 12.00 , 12.30 மணி அளவில் எனது அம்மா வீட்டிற்கு செல்வதற்காக பேருந்தில் ஏறி சமத்துவபுரம் ஆர்ச்சில் இறங்கினேன்.வழக்கில் இறந்து போன காளிதாஸ் எனக்கு தெரியும். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட விஜி பாண்டி, திவான் மற்றும் விக்னேஷ் ஆகிய மூவரும் ஆட்டோவில் உட்கார்ந்து இருந்ததை பார்த்தேன். இறந்து போன காளிதாஸ் எனது சித்தி மகன் எனவே அவனை எனக்கு ஏற்கனவே தெரியும். **3)** ஆஜர் எதிரி எனது உறவினர் என்பதால் ஆஜர் எதிரியும் எனக்கு ஏற்கனவே தெரியும். இது சம்பந்தமாக எனது சித்திக்கு நான் போன் மூலம் தகவல் சொல்லிவிட்டு சென்றுவிட்டேன் எனது நம்பர் 75 98 56 71 22 எனது

சித்தி நம்பர் எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை. அதற்கு பிறகு காளிதாஸ் இறந்த செய்தி மாலை 3.00 மணிக்கு மேல் தெரிந்தது. போலீசார் என்னை விசாரித்த சமயத்தில் இந்த விபரங்களை சொன்னேன்.

<u>இரண்டாவது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> -

இறந்து போன காளிதாஸ் எனது உறவினர் என்றால் சரிதான். எனது சித்திக்கு போன் மூலம் தகவல் சொன்னதாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பதட்டத்தில் மறந்து இருக்கலாம், நான் ஆஜர் எதிரிகள் மூன்று பேரையும் இறந்து போன காளிதாஸ் ஒன்றாக இருந்ததை மட்டுமே பார்த்தேன் அவர்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டதாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

இறந்து போன காளிதாஸ் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வெகு நாட்கள் ஆனதால் போலீசார் என்னை விசாரித்த தேதி ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

<u>மூன்றாம் எதிரி தரப்பு கு.வி</u>.

எதிரிகளுடன் இறந்து போன காளிதாசை பார்த்த விவரத்தை மட்டும் சொன்னேன். போலீசார் இது குறித்து விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. சமத்துவபுரம் ஆர்சிலிருந்து எனது வீட்டிற்கு நான் நடந்து சென்றேன். சிவகங்கை தொண்டி ரோடு கிழ மேல் ரோடா தென் வடல் ரோடு என்று தெரியாது என்ற விவரமும் எனக்கு தெரியாது.

2) ஆர்ச் வழியாகத் தான் வீட்டிற்கு செல்ல வேண்டும் அது தெற்கு திசையில் உள்ளது. நான் ஆர்சில் இருந்து வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்தேன். எவ்வளவு தூரத்தில் எனது வீடு உள்ளது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். ஆட்டோ ரோட்டில் எந்த திசையில் பார்த்து நின்று கொண்டிருந்தது என்று

சொல்ல முடியாது என்றால் முந்திரி காடு இருந்த திசையை நோக்கி நின்று கொண்டிருந்தது.

3) ஆட்டோ முந்திரி தோப்பை பார்த்து நின்று கொண்டிருந்தது. அது நின்று கொண்டிருந்த திசையை தற்போது என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் இறங்கியவுடன் ஆட்டோவை பார்த்து விட்டு வந்து விட்டேன். யார் யார் எந்த சீட்டில் ஆட்டோவில் அமர்ந்திருந்தார்கள் என்று நான் சரியாக கவனிக்கவில்லை.

4) ஆனால் 4 பேர் உட்கார்ந்து இருந்ததை பார்த்தேன். நான் அவ்வாறு உட்கார்ந்திருந்த நபர்களிடம் எதுவும் பேசவில்லை. மீனாட்சி நகரிலிருந்து நான் ஆர்சிக்கு ஷேர் ஆட்டோவில் வந்தேன். அங்கிருந்து எனது தாயாரின் வீட்டிற்கு நடந்து போனேன். போலீஸ் விசாரணையில் நான் ஷேர் ஆட்டோவில் வந்த விவரத்தை சொன்னேனா என்று ஞாபகம் இல்லை. நான் கூறுவது போல் அன்றைய தினம் எதிரிகளை இறந்து போன நபருடன் பார்த்ததாக கூறுவது பொய் என்றும் அவ்வாறு நான் பார்க்கவில்லை என்றும் தற்பொழுது வழக்குக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) முந்திரி தோப்பு ஆள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரி. எல்லாம் சில நேரங்களில் இருப்பார்கள் மற்ற நேரங்களில் ஆள் இருக்க மாட்டார்கள். எத்தனை மணிக்கு நான் ஷேர் ஆட்டோவில் வந்து இறங்கி நான் எனது தாயார் வீட்டுக்கு நடந்து சென்றேன் என்ற விபரத்தை நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காளிதாஸ் எனது சின்னம்மா மகன் என்பதால் நான் வழக்கு தொடர்பாக எந்த விவரமும் பார்க்காமல் தற்பொழுது போலீசார் கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல.

<u>**மறு விசாரணை**</u>. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.07.25 14:59:44 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

**DEPOSITION OF WITNESS.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI**

**S.C.No. 09 /2021**

**PROSECUTION WITNESS No - PW-5**

**Name :** கௌரிசங்கர் **Caste:**

**Father's Name:** **Calling:**

**Village:** **Religion:**

**Taluk:** **Age:**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of June 2024.**

3-ம் எதிரி ஆஜர், 2-ம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u> :

1) நான் தற்பொழுது சிவகங்கை வட்டம் அரசணி கிராம நிர்வாக அலுவலராக கடந்த இரண்டு வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். கூடுதல் பொறுப்பாக 2019 ஆம் ஆண்டு நான் காஞ்சிரங்கால் கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன்.

2) அந்த சமயத்தில் நான் சூரக்குளம் கிராமத்ததை சேர்த்து பொறுப்பு கிராம நிர்வாக அதிகாரியாக பார்த்துக் கொண்டு வந்தேன். 28.2.2019 ஆம் தேதி அன்று நான் எனது அலுவல் பணியில் இருந்த பொழுது மாலை சுமார் 5.30 மணி அளவில் கிடைத்த தொலைபேசி தகவலின் பெயரில் சூரக்குளம் சிப்காட் இண்டஸ்ட்ரிக்கு அடுத்த இடத்தில் சர்வே எண் 274-ல் இறந்த நிலையில் ஆண் பிரேதம் இருப்பதாக தகவல் கிடைத்தது. நானும் எனது கிராம உதவியாளர் இருவரும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றோம். அங்கு இறந்த நிலையில் 35-லிருந்து 40 வயது மதிக்கத்தக்க கழுத்தில் காயங்களுடன் ஒரு ஆண் நபர் இறந்து கிடந்ததை பார்த்தேன். பின் சிவகங்கை நகர காவல் நிலையத்திற்கு சென்று எழுத்து மூலமாக சட்ட நடவடிக்கை எடுக்க கோரி புகார் கொடுத்தேன்.

3) நான் கொடுத்த புகார் வாக்குமூலம் **அ.ச.ஆ.3.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் உடன் சம்பவ இடத்திற்கு வந்து மருத்துவமனைக்கு ஆய்வாளர் எடுத்துச் செல்வதற்கு நான் உதவியாக இருந்தேன். நான் மருத்துவமனைக்கு சுமார் 8 மணிக்கு சென்ற பொழுது மருத்துவமனையில் இறந்தவர் மனைவி முத்துலட்சுமி என்பவர் ஆய்வாளர் உடன் பேசிக்கொண்டிருந்தார். அவர் சொன்ன தகவலின் பெயரில் இறந்து போனது அவரது கணவர் தான் என தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறிப்பு:** சாட்சி அடையாள அட்டை அணியாமல் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார் அடையாள அட்டை அணியுமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டது.

**2-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1) எனக்கு போனில் தகவல் சொன்னது யார் என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு ஆள் முலமாக தகவல் வந்ததா அல்லது செல்போனுக்கு தகவல் வந்ததா என்றால் தற்போது என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. செல்போனில் எனக்கு தகவல் வந்ததாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) சர்வே எண் 274 பிரேதம் இருந்த விபரத்தை புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். யாருடைய நிலம் சர்வே எண் 274 அரசுக்கு சொந்தமானது. மருத்துவமனை சேர்க்கும் வரை எனக்கும் போலீசுக்கும் இறந்து போன நபரின் பெயர் தெரியாது என்றால் சரிதான். அதேபோல் பெயரும் அடையாளம் தெரியாது என்றால் சரிதான்.

3) முத்துலட்சுமி மதுரை செல்லூரை சேர்ந்தவர் என்றால் சரிதான். முத்துலட்சுமிக்கு யார் தகவல் சொல்லி அவர் அங்கு வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீஸ்

விசாரிக்கும் பொழுது இரவு 8 மணி. சம்பவம் நடந்த தினத்தன்று முத்துலட்சுமி மருத்துவமனைக்கு வந்திருந்தார் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த அன்று விசாரித்தது தான். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என் முன்னிலையில் பார்வை மகஜரோ மாதிரி வரைபடமோ தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) பிரேதத்தின் அருகில் நான் வேறு எந்த பொருளும் பார்க்வில்லை. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும் நான் காவல் நிலையத்தில் ஆஜராகி புகார் கொடுத்திருந்தால் முதல் தகவல் அறிக்கையில் இது சம்பந்தமாக அரசு அலுவலர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு போலீசாருடன் சென்ற பொழுது அங்கே கூட்டம் கிடையாது. 4, 5 பேர் இருந்தார்கள். எனக்கு போன் செய்த நபர் யார் என்று தெரியாததால் அவர் அங்கு இருந்தாரா என்று தெரியாது. நான் சொல்வது போல் பிரேதத்தை நான் மருத்துவமனைக்கு போலீசார் உடன் எடுத்துச் செல்லவில்லை என்றும் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

3-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை, 2-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.07.25 15:00:01 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை